**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 228/2018**

Deposition of Witness for Prosecution

Defence PW : 34

Court I Additional District Court, Tiruvallur.

Name : Tr. Babuphilip

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the 21st day of July 2022.

**Date: 21.07.2022, S.C.No. 228/2018 PW : 34, Tr. Babuphilip**

**முதல் விசாரணை..**

நான் பெங்களூரில் குடியிருந்து வருகிறேன். சாம் எண்டர்பிரைசஸ் என்ற ஹார்டுவேர்ஸ் நிறுவனத்தை நானும் எனது தம்பி ரோஷன்பிலிப் நடத்தி வந்தோம். அந்த நிறுவத்தின் உரிமையாளர் நான் தான். அந்த நிறுவனத்தை என் தம்பி தான் நிர்வகித்து வந்தார். 9962077732 என்ற மொபைல் எண் என்னுடையதா என்று எனக்கு ஞாபகமில்லை. சந்திரன் என்பவரை எனக்கு தெரியாது. 2014ல் வழக்கு சம்பந்தமாக என்னை போலீஸார் ஒருதடவை விசாரித்தார்கள். என்னையும், என் தம்பியையும் விசாரித்தார்கள். அந்த நிறுவனத்தின் உரிமையாளர் நான் தான் என்று சொன்னேன். இந்த வழக்கு விஷயமாக என் தம்பியைதான் விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் 04.09.2014 தேதியிட்ட சாம் எண்டர்பிரைசஸ் என்று போடப்பட்ட இன்வாய்ஸ் எங்கள் நிறுவத்திற்கு உரியது இல்லை. அது நாங்கள் கொடுக்கவில்லை. அந்த இன்வாய்ஸ் எங்கள் நிறுவனத்திற்கு உரியது இல்லை. அவ்விதம் இன்வாய்ஸ் எதையும் என்னுடைய நிறுவனம் கொடுக்கவில்லை என்று என் தம்பி சொன்னார். நாங்கள் இன்வாய்ஸ் எதையும் பிரிண்ட் செய்யவில்லை.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை என்று சொல்லப்பட்டது.

S GANAPATHISAMY

Digitally signed by S GANAPATHISAMY
Date: 2022.07.22 18:55:33 +0530

I Additional District and Sessions Judge,
Tiruvallur.